# மட்டக்களப்பில் வேடவேளாளர் வழிபாட்டு மரபில் உத்தியாக்கள் வழிபாடு

ரவிச்சந்திரன் கு

வேட வழிவந்த வேடவேளாளர்களும் அவர்களது தெய்வங்களும், வழிபாட்டு முறைகளும் ஆராயப்படுவதோடு மிகசிறப்பாக உத்தியாக்கள் வழிபாடு ஆராயப்படும். மட்டக்களப்பு மாவட்டத்தில் வேடவேளாளர் அதிகம் வாழும், கற்குடா தேர்தல் தொகுதியில் முறுத்தானை, களுவன்கேணி, தளவாய் என்னும் கிராமங்களை அடிப்படையாக கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்படும்.

இதுவரை காலமும் மட்டக்களப்பில் ஆதிக்க குடிகளாக இருக்கும் வெள்ளாளர்கள், முக்குகர்கள் அவர்களோடு தொடர்புபடும் தெய்வங்களான கண்ணகியம்மன், மாரியம்மன், திரௌபதிஅம்மன், பேச்சியம்மன் போன்ற கிராமியத் தெய்வங்களும் அதற்கான சடங்குகளும், பண்பாடுகளும் ஆய்வுப் பொருளாக இருந்து வந்தன. மிகப் பின்தங்கிய நிலையில் மட்டக்களப்பு பண்பாட்டோட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் வேடர், பள்ளர், குறவர், பறையர் பற்றிய ஆய்வுகள் மிகக் குறைவு. இது இன்று இனக் குழும மக்கள் பற்றிய கல்வியில் (Subaltern Studies) முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இத்தகைய் காரணங்களை கருத்திற் கொண்டு இதிலொரு பகுதியினராக இருக்கின்ற வேடர்களும் அவர்களது வழிபாட்டும் முறைகளுள் ஒன்றான உத்தியாக்கள் வழிபாடு இவ் ஆய்வில் இடம்பெறுகின்றன.

இவ் ஆய்வில் முதல் நிலைத் தரவுகளாக கள ஆய்வு மூலம் ஆய்வாளனால் திரட்டப்பட்ட தகவல்களும், இரண்டாம் நிலைத் தரவுகளாக இது தொடர்பாக வெளிவந்த இலக்கியங்களும் சஞ்சிகைகளும் கட்டுரைகளும் அமைகின்றன. மட்டக்களப்பை பொறுத்தவரைக்கும் இந்து மதத்தின் செல்வாக்கு கூடுதலாக இருக்கின்றது. இங்கு ஆகம முறை சார்ந்த வணக்க முறைகளும், ஆகம முறைசாராத சிறு தெய்வ வணக்க முறைகளும் காணப்படுகின்றன. இச் சிறு தெய்வங்களுக்குச் செய்யும் வணக்க முறையை சடங்கு என்பர்."

இச் சிறு தெய்வங்களுள் வேட வழிவந்த வேடவேளாளர் எனப்படுகின்ற இனக்குழு சமூகத்தில் குமார தெய்வமும் அதன் பல கிளைத் தெய்வங்களும், கன்னிமாரும், உத்தியாக்களும் இடம் பெறுகின்ற போதும் இவ் ஆய்வில் உத்தியாக்களின் வழிபாட்டு மரபை மாத்திரம் ஆராய்கிறது. இத்தகைய சிறு தெய்வ வழிபாட்டு முறைக்குள் அடங்கியுள்ள வேடர்களும், அவர்களது வழிபாட்டு முறைகளும் மட்டக்களப்பின் பாரம்பரிய வழிபாட்டு முறைகளுள் முக்கியமாக பேணப்பட வேண்டியவை. மட்டக்களப்பின் வரலாற்றில் மிகவும் பழமையான வழிபாட்டு முறையைக் காட்டும் நிகழ்வுகள் வேடர்களின் மத்தியில் உள்ள தெய்வங்களிலும் வழிபாட்டு முறையிலும் இருக்கின்றன. இவர்களது வழிபாட்டு முறை வேண்டுதல் வழிபாட்டு முறையாக இருக்கின்றது. இவ்வாய்வின் மூலம் மட்டக்களப்பின் பாண்பாட்டில் பழமையான வழிபாட்டு முறை ஒன்று இனங்காணப்படுவதுடன் அதன் பண்பாட்டியல் அம்சங்களும் வெளிக்க கொணரப்படுவதோடு பேணவும்படும்.

**திறவுச் சொற்கள்** : வேடவேளாளர், வழிபாடு, உத்தியாக்கள்

*நுண்கலைத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை. shapthikka@gmail.com*